166 - 169 - tamil 30-06-2004 10:02 Pagina 166

*Summaries in Tamil*
*Intervention 2004, Volume 2, Number 2, Page 168 - 169*

# தமிழில் ஆய்வுச் சுருக்கங்களுடன்

**நாக்கிவேல் முகாம் உளநல திட்டம்: மனவடுவுக்குள்ளான அகதிகளுக்கு உளசமூக ஆதரவை வழங்குவதற்காக உள்ளூர் தகுதியாளர்களை உருவாக்குதல்**

பாரிய அழிவுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ளூர்த் துணைமருத்துவ நபர்களால் வழங்கப்படுகின்ற குறகியகாலச் சிகிச்சை அணுகுமுறைகளின் பயன்பாட்டை நிறுவுவதே நாக்கிவேல் முகாம் உளநலத் திட்டத்தினுடைய முக்கிய இலக்காக இருக்கின்றது. இந்தக் கட்டுரை மேற்கூறப்பட்ட திட்டத்தைப்பற்றி விவரிப்பதுடன், மனவடுவுக்குட்பட்டவர்களுக்கு ஓர் உதவியாக அமைந்திருக்கின்ற உரை வெளிப்பாட்டுச் சிகிச்சை முறையினைப் பற்றியும் ஆராய்கின்றது. இந்தத் திட்டத்திலே அகதிகளிடையே விரவிக் காணப்படுகின்ற நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோயின் பரவலைக் கணிப்பிடுகின்ற ஒரு நோய்ப்பரம்பல் ஆய்வும் உள்ளடக்கப்பட்டிருந்தது. ஏனைய ஆய்வுகளைப் போலவே, இந்த ஆய்விலும் மிக அதிகமானோர் நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தது வெளிக்காட்டப்பட்டது. மனவடுவை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் ருவாண்டாவிலும், சோமாலியாவிலும் முறையே 9, 11 வருடங்களுக்கு முன்பே நடைபெற்றிருந்த பொழுதிலும், 31.1 வீதமான ருவாண்டிய மக்களும் 47 வீதமான சோமாலிய மக்களும் மேற்கூறப்பட்ட நோயின் குணங்குறிகளைக் கொண்டிருந்தனர். இந்தக் கட்டுரை ஆசிரியர்கள், உறுதியாக்கப்பட்ட விஞ்ஞானபூர்வக் கருத்துக்களின் அடிப்படையில், அதேவேளை, வேலை செய்கின்ற மக்களின் கலாசாரத்துக்கு ஏற்புடைய முறைகளைக் கையாண்டு எவ்வாறு நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோய்க்குச் சிகிச்சையளிக்கலாம் என்பதனைப் பற்றியதான விடயங்கள் அடங்கிய உளநலத்திட்டங்களே மனிதாபிமானப் பணிகளில் முன்னுரிமை பெறவேண்டும் எனக் கூறித் தங்கள் கட்டுரையை நிறைவு செய்கிறார்கள்.

முக்கிய சொற்பதங்கள்: மனவடு, நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு நோய், அகதி, முகாம், உளவளத்துணை, உரை வெளிப்பாட்டுச் சிகிச்சை, கட்டமைக்கப்பட்ட வன்முறை, சோமாலியா, ருவாண்டா.

---

**ஓர் ஆபிரிக்க அகதி முகாமில் உளநோய்கள்**

இந்தக் கட்டுரையானது, கென்யாவில் உள்ள கக்குமா அகதி முகாமில் இருக்கின்ற சமூக உளநல சேவையொன்றில் உதவி நாடி வந்தவர்களில் விரவிக் காணப்பட்ட உளநோய்களைப் பற்றிய ஓர் ஆய்வை விபரிக்கின்றது. இந்த ஆய்வு, அங்குள்ள தாதி முகாமையாளரால் 3 வருடகாலமாகச் சேகரித்து வைக்கப்பட்ட, நோயாளர் விவரக் கையேட்டின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டது. மிகப் பொதுவான நோய் நிதானமாக நெருக்கீட்டிற்குப்பிற்பட்ட மனவடு நோய் இருந்தது. கென்யா போன்ற குறைவான வருமானமுள்ள நாடுகளிலே இருக்கின்ற முகாம்களிலே, சமூக உளநல சேவைகளைக் குறைந்த செலவோடு ஸ்தாபிப்பது சாத்தியமானது என்பதை இந்த ஆய்வினூடான பெறுபேறுகள் கோடி காட்டி நிற்கின்றது. இவ்வாறான ஒரு சேவை உடனடியாகவும், அதேவேளை தொடர்ச்சியாகவும் தேவைப்படுகின்ற உதவி வழங்கலை வலியுறுத்துகின்ற ஒன்றாகக் கவனத்தை ஈர்க்கலாம்.

முக்கிய சொற்பதங்கள்: மனவடு, அகதிகள், சமூக உளநலம், சேவைப் பயன்பாடு, நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட மனவடு, உளமாய நோய்

166 - 169 - tamil 30-06-2004 10:02 Pagina 167



**யுத்தத்தினூடே வாழ்பவர்களுடன் வேலை செய்தல்: மருத்துவத் துறைசார் உளவியலாளர்களின் பங்கு**

இந்தக் கட்டுரையில், மேலைத்தேய மருத்துவத் துறைசார் உளவியல் மற்றும் உளச்சிகிச்சை மாதிரிகளை பாரம்பரிய, கூட்டான கலாசாரங்களுடன் இணைப்பதற்கான சாத்தியப்பாடுகள் ஆராயப்படுகின்றன. இதற்கான ஓர் உதாரணமாக இலங்கையின் கலாசாரம் எடுக்கப்படுகின்றது. கணிப்பீடு, தலையீடு, மதிப்பீடு, கற்பித்தல், ஆய்வியல் என்பவற்றில் பயிற்சி பெறுவதற்கான வழிமுறைகளும் விவரிக்கப்படுகின்றன.

முக்கிய சொற்பதங்கள்: மருத்துவத் துறைசார் உளவியல், கூட்டான கலாசாரம்

---

**உளநலம் சார்ந்த பரப்புகளில், மொழிபெயர்ப்பாளர்களுடன் வேலை செய்வதற்குகந்த நல்ல செயன்முறை விடயங்கள்**

ஆதிக்கஞ் செலுத்துகின்ற அல்லது வழங்கியாக இருக்கின்ற மொழியொன்றைப் பேச இயலாது இருக்கின்ற காரணத்தினாலே, சரியான உளநல சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமைகளிலே, ஒரு மொழி பெயர்ப்பாளர் அல்லது ஓர் இருகலாசாரப் பணியாளர் தேவைப்படுகின்றார். இந்தக் கட்டுரை, தொடர்ந்துகொண்டிருக்கும் ஆயுத முரண்பாட்டு நிலைமைகளிலோ, அல்லது அவ்வாறான நிலைமைகளிலிருந்து தப்பியோடி வந்திருக்கும் புகலிடம் தேடுவோர், அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தோர் மத்தியிலோ, மொழிபெயர்ப்பாளர்களுடன் வேலை செய்யும்பொழுது கவனத்திற் கொள்ள வேண்டிய சில நல்ல செயன்முறை விடயங்களைச் சிபாரிசு செய்கின்றது.

முக்கிய சொற்பதங்கள்: மொழிபெயர்ப்பாளர்கள், மொழி, கலாசாரம், உளநலம், உளசமூக நன்நிலை, பயிற்சி, ஆதரவு

**ஆயுத முரண்பாடு உள்ள இடங்களில் உள்ள உளவளத்துணையாளர்களுக்கான மருத்துவத் துறைசார் மேற்பார்வை**

இந்தக் கட்டுரையானது, உளவளத்துணையாளர்களுக்கான மேற்பார்வையை உளஆதரவு, கல்வியூட்டல் மற்றும் துறைசார் ஆற்றுகையைச் சரிபார்க்கும் ஒரு கட்டமைப்புடைய படிமுறையாக விவரிக்கின்றது. இக் கட்டுரை ஆயுத முரண்பாடு நடைபெறும் பிரதேசங்களில் இருக்கின்ற, மட்டுப்படுத்தப்பட்ட துறைசார் கல்வியையுடைய உளவளத்துணையாளர்களுடன் வேலை செய்த இந்தக் கட்டுரையாளர்களின் அனுபவத்தை அடியொற்றி எழுதப்பட்டிருக்கிறது.

முக்கிய சொற்பதங்கள்: மதிப்பீடு, பிரச்சினையை எண்ணக் கருப்படுத்துதல், மருத்துவத் துறைசார் மேற்பார்வை, உளவளத்துணை

---

**ஆப்கானிஸ்தானில் சமூக உளநல சேவை – ஆய்வும் அனுசரணையும்**

ஆப்கானிஸ்தானில் 2001ம் ஆண்டில், சிறுவர் பாதுகாப்பு நிதியமும், சிறுவர்களுக்கான ஐக்கிய நாடுகள் நிதியமும் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தின. இத்திட்டங்களிலே, உளநலசேவை வழங்கலைவிட, சமுதாய அடிப்படையிலான உளசமூக ஆதரவை வழங்குவதான திட்டங்களே பிரதானப்படுத்தப்பட்டன. இந்தக் கட்டுரையானது, மேற்குறிப்பிட்ட இரண்டு நிறுவனங்களும் பொறுப்பெடுத்துக்கொண்ட வேலைத்திட்டங்களின் கொள்கைத் தத்துவங்களைப்பற்றி ஆராய்கின்றது. அத்துடன் காபூலில் 2001ம் ஆண்டிற்கும் 2002ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலே நடைமுறைப்படுத்தப்பட்ட ஆய்வுகள், திட்டமிடல் என்பவை பற்றியும் இங்கு வெளிக்கொணரப்படுகின்றது.

முக்கிய சொற்பதங்கள்: சமுதாய அடிப்படையிலான உளசமூக ஆதரவு, தரரீதியிலான ஆய்வு, சிறார் குழுக்கள்

166 - 169 - tamil 30-06-2004 10:02 Pagina 168

WARTRAUMA
FOUNDATION

*War Trauma Foundation is dedicated to the provision, via aid organisations, of training programmes for trauma treatment to benefit victims of war and organised violence throughout the world.*

In the past half century, a whole new science has been developed to combat the horrifying trauma caused by war, terror and violence. These scientific developments find wide areas of application. Today, many organisations are engaged in programmes aimed at capacity building for local people, for example by training them to become psychosocial workers or counsellors. WTF wants to support these organisations both professionally and financially.
Local organisations may apply for this kind of assistance.
To date, War Trauma Foundation has been engaged in projects in Algeria, Cambodia, Sri Lanka, Nepal, Croatia, Bosnia Herzegovina, Serbia, Kosovo, Rwanda, Burundi, the Democratic Republic Congo, South Africa, Namibia and East Timor.
War Trauma Foundation can count on the voluntary professional advice of a council of 17 experts: psychiatrists, psychologists and anthropologists.
If you want more information on War Trauma Foundation, or if you have a request for support, please contact us.

**War Trauma Foundation**
Tulpenburg 31
1181 NK Amstelveen
The Netherlands
Tel: +31-20-6438538
Fax: +31-20-6474580
e-mail: info@wtfi.nl
www.wartraumafoundation.nl